O.S. No: 87/2015

பெயர் : சுவாமிநாதன்

**பி.சா. 1**

30-06-2025

**4, 13, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

தந்தை வழி தாத்தா நடேசபடையாச்சி . நடேசபடையாச்சியும் அவருடைய சகோதரர்களும் 1950 லேயே வா .சா.ஆ. 27 மூலமாக பாகம் செய்துக்கொண்டுள்ளார்கள் என்றால் சரி . பாகப்பிரிவினை பத்திரப்படி நடேசபடையாச்சிக்கு கிடைத்த சொத்துக்கள் அவருடைய சொந்த சொத்துக்கள் என்றால் கிடையாது . நடேசபடையாச்சியின் அப்பா பெயர் சீனன் படையாச்சி . அவருடைய பெயரில் என்னென்ன சொத்துக்கள் இருந்தது என்று நான் பார்த்ததில்லை. சீனன் படையாச்சியின் அப்பா பெயரிலேயோ, தாத்தா பெயரிலேயோ சொத்துக்கள் இருந்ததா என்று எனக்கு தெரியாது. நடேசபடையாச்சி தனக்கு பாகம் மூலம் கிடைத்த சொத்துக்களையும், அதற்கு பிறகு கிரையம் பெற்ற சொத்துக்களை பொறுத்து, 1966 இல் வா.சா.ஆ. 33 இன் மூலமாக ஒரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த உயில் படி என் அப்பா நாகராஜன் படையாச்சிக்கும் , என் அத்தைக்கும் சொத்துக்களை கொடுத்திருக்கிறார் என்றால் ஆமாம் . அந்த உயில் எழுதிய காலத்திலேயே நாகராஜன் படையாச்சியின் பெயரில் அவரால் சொத்துக்கள் வாங்கப்பட்டிருந்தது என்றாலும் , அந்த சொத்துக்களை கண்டு உயில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரி . நடேசபடையாச்சி உயில் மூலம் நாகராஜனுக்கு கொடுத்த சொத்துக்களும், நாகராஜனே கிரையம் வாங்கிய சொத்துக்களும் அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் பூர்வீக சொத்துக்களின் வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட சொத்துக்கள் ஆகும் . நடேசபடையாச்சி உயில் மூலம் கொடுத்த சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக சொத்துக்கள் . நடேசபடையாச்சிக்கு உயில் மூலம் கிடைத்த சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும் அது பூர்வீக சொத்தோ , தனிப்பட்ட சொத்தோ கிடையாது என்றால் சரியல்ல . நடேசபடையாச்சி எழுதி உயிலை நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன். என் அப்பா நாகராஜ படையாச்சி விவசாயம் மற்றும் சினிமா தியேட்டர் கூட்டாக நடத்தி வந்தார் . என்னுடைய பிரமாண பத்திரம் பாரா 7 இல், நாகராஜ படையாச்சிக்கு விவசாயத்தை தவிர வேறு ஏதும் வருமானம் கிடையாது என்று சொல்லியிருந்தால் அது தவறு. என் தாத்தா 1966 உயில் எழுதி வைத்த பிறகு என் அப்பா என்னென்ன சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் நிறைய சொத்துக்கள் கிரையம் வாங்கினார் . அதை சொல்ல முடியும். என் சகோதரிகள்

போட்ட இந்த வழக்கில் எந்தெந்த சொத்துக்கள் என் அப்பாவால் கிரையம் பெறப்பட்டது என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும் . அலவந்தியபுரத்தில் 126/10, சுவாமிமலையில் புல எண் 122, மற்றவை ஞாபகமில்லை. என் அப்பா பெயரில் இந்த இரண்டு சொத்துக்களுக்கும் கிரையம் பதிவாகியுள்ளது . தேதி நினைவில்லை. என் சகோதரிகள் வா.சா.ஆ. 8 ஆக புல எண் 126/10 பொறுத்து கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள். இந்த சொத்து 13 ஆம் பிரதிவாதி ஈஸ்வர் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது . என் அப்பா இந்த சொத்துக்கு 25 வருசமாக பணம் கொடுத்து வைத்திருந்தார் ரெஜிஸ்டராகமல் இருந்தது . வா.சா.ஆ- 8 கிரைய ஆவணத்தில் என் அப்பா கொடுத்த பணத்தின் அடிப்படையில் தான் ஈஸ்வர் பெயரில் பதிவு செய்து கொடுப்பதாக கண்டு எழுதப்படவில்லை என்றால் சரி . வா.சா.ஆ. 8 பதிவு செய்யப்பட்ட காலத்தில் என் அப்பா உயிருடன் இருந்தார் என்றால் ஆமாம். சுவாமிமலை புல எண் 122, குறித்த ஆவணம் வா.சா.ஆ. 21 ஆக வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த ஆவணம் 6 ஆம் பிரதிவாதி விஜயராஜ் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது . என் அப்பா இந்த சொத்துக்கு 25 வருசமாக பணம் கொடுத்து வைத்திருந்தார் ரெஜிஸ்டராகமல் இருந்தது . வா.சா.ஆ- 21 கிரைய ஆவணத்தில் என் அப்பா கொடுத்த பணத்தின் அடிப்படையில் தான் ஈஸ்வர் பெயரில் பதிவு செய்து கொடுப்பதாக கண்டு எழுதப்படவில்லை என்றால் சரி . வா.சா.ஆ. 21 பதிவு செய்யப்பட்ட காலத்தில் என் அப்பா உயிருடன் இருந்தார் என்றால் ஆமாம் . என் அப்பா அரசியல் கட்சியில் இருந்து ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார் என்றால் ஆமாம் . என் அப்பா பல தொழில்கள் செய்து வருமானம் ஈட்டிவந்தார் என்றால் ஆமாம் . என் அப்பா என் பெயரிலும் , வாதிகள் 3 பேர் பெயரிலும் மற்றும் 2, 3 பிரதிவாதிகள் பெயரிலும் பல்வேறு சொத்துக்கள் வாங்கி வைத்திருந்தார் என்றால் ஆமாம். வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் என் அப்பா வாங்கிய சொத்துக்கள் எதுவும் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை . ஆனால் 4, 6, 13, 14 பிரதிவாதிகள் பெயரில் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . என் அப்பா உயில் மூலம் கிடைத்த சொத்துக்களையும் தனிப்பட்ட முறையில் சம்பாதித்த சொத்துக்களையும் யார் யாருக்கு விற்றுள்ளார் என்றால் நிறைய பேருக்கு விற்றுள்ளார். பெயர் சொல்ல இயலாது . 15/03/1999 இல் என் அப்பா நாகராஜன் குப்புசாமி மகன் கலியமூர்த்தி என்பவருக்கு வா .சா.ஆ. 50 மூலம் கிரைய செய்து கொடுத்துள்ளார் என்றால் சரி . இந்த கலியமூர்த்தி இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. கலியமூர்த்திக்கு விற்ற சொத்து என் அப்பா தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்தா என்றால் ஞாபகமில்லை . இந்த கிரைய பத்திரத்தில்

01/07/1974 இல் நான் தனிப்பட்ட முறையில் வாங்கிய சொத்து என்று இந்த கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி . வா.சா.ஆ. 51 முதல் வா.சா.ஆ. 54 வரையிலான ஆவணங்கள் என் அப்பா பல்வேறு நபர்களுக்கு கிரையம் செய்து கொடுத்த ஆவணங்கள் என்றால் ஆமாம். அவ்வாறு கிரையம் பெற்றவர்களை நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம் . வா.சா.ஆ. 51 முதல் வா.சா.ஆ. 54 வரையிலான ஆவணங்களில் கண்ட சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் சர்வே நம்பரை சொன்னால் என்னால் சொல்ல முடியும். இந்த வழக்கில் அந்த சொத்துக்கள் சேர்க்கப்படாமல் இருந்தால் , என்னுடைய கட்சி படி அது கூட்டு குடும்ப சொத்து . அதையும் இந்த வழக்கில் சேர்க்க வேண்டும் என்றால் சரி. நடேசபடையாச்சி என் அத்தை தையல் நாயகிக்கு கொடுத்த சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்பட வேண்டியது தானே என்றால் எனக்கு தெரியாது. சேர்க்கப்படவில்லை. வா.சா.ஆ. 11, வா.சா.ஆ. 12 மூலம், 14 ஆம் பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் ஆமாம். அந்த சொத்துக்கள் 14 ஆம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் பாகப்பிரிவினைக்கு உட்பட்டதல்ல என்றால் சரி. பி.சா.ஆ. 3 முதல் பி.சா.ஆ.7 சொத்துக்கள் என் தாய் வழி தாத்தா என் பெயரில் என் அப்பா பணம் கொடுத்து வாங்கினார் என்றால் சரியல்ல . தாத்தா தான் வாங்கினார் . பி.சா.ஆ. 9 ஐ என் அப்பாவும் சீத்தாராமனும் கிரைய ஒப்பந்தம் செய்துக்கொண்டதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் . அதில் என் அப்பா கையெழுத்து இல்லை என்றால் சரி. இந்த ஒப்பந்தத்தில் கண்ட புல எண் 122 என் தந்தை பெயரிலும் , விஜயராஜ் பெயரில் கிரையம் பெறப்பட்டுள்ளது . திருவலஞ்சுழி மனோகரன் என்பவது யார் என்றால் மனோகரன் என்பது நான் தான் . என்னை மனோகரன் என்றும் அழைப்பார்கள் . சுவாமிநாதன் என்றும் அழைப்பார்கள். அவ்வாறு மனோகரன் என்று அழைப்பார்கள் என்ற விவரத்தை நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லவில்லை என்றால் சரி . நான் அலவந்திபுரம் கீழ தெருவில் வசிக்கிறேன் . நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் அலவந்திபுரத்தில் வசிப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரி. திருவலஞ்சுழியில் வசிக்கும் மனோகரன் நான் இல்லை என்றால் சரி . பி.சா.ஆ. 8 கடிதம் எழுதியவர் உயிருடன் உள்ளார். 06 செண்ட் கூடுதலாக இடம் இருப்பதால் பணம் கேட்டு எனக்கு கடிதம் அனுப்பினார். இந்த கடிதம் 02.11.1983 இல் எழுதியதாக உள்ளது என்றால் சரி . என் அப்பா உயிருடன் இருக்கும் போது , கிரைய ஒப்பந்தம் அவருக்கும் என் அப்பாவிற்கும் இடையே ஏற்பட்டிருந்த போது, ஏன் எனக்கு கடிதம் எழுதினார் என்றால் நான் தான் பணம் கொடுத்து என் அப்பா பெயரில் கிரைய ஒப்பந்தம் எழுதினேன். அதனால் எனக்கு கடிதம் எழுதினார். பி.சா.ஆ. 8 கடிதத்தில்

என் அப்பாவிற்கும் அவருக்கும் ஏற்பட்ட கிரைய ஒப்பந்தம் குறித்து எதுவும் எழுதப்படவில்லை என்றால் சரி . என் அப்பா 2014 ஆம் வருடம் இறந்தார் . தேதி, மாதம் நினைவில்லை. என் அப்பா அரசியல் கட்சியில் இருந்த போதும் , ஊராட்சி மன்ற தலைவராக இருந்த போதும், மற்ற தொழில்கள் செய்துவந்த போதும் , அவருடைய வேலைகளை அவர் சுறுசுறுப்பாக பார்த்து வந்தார் என்றால் சரி . 2000 க்கு பின்னர் நான் தான் பார்த்தேன் . என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் அப்பாவிற்கு பதிலாக 2000 ம் வருடத்தில் இருந்து நான் தான் குடும்பத்தை பார்த்து வந்தேன் என்று சொல்லவில்லை என்றால் சரி. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலம் பாரா 10 இல் என் தகப்பனார் சொத்துக்கள் குறித்து எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறேன் என்றால் ஆமாம் . ஆனால் வாதிகளே வா.சா.ஆ. 33 மூலமாக என் அப்பா எழுதி வைத்த உயிலை தாக்கல் செய்திருக்கிறார்கள் என்றால் ஆமாம் . என் அப்பா வா.சா.ஆ. 33 உயிலை பதிவு செய்து, டெப்பாசிட்டாக சார் பதிவாளர் அலுவலகத்தில் வைத்திருந்தார் என்றால் அவர் இறந்த பிறகு தான் எனக்கு தெரியும் . என் அப்பா இறந்த பிறகு சார் பதிவாளர் அலுவலகத்தில் இந்த உயிலை எடுத்து படித்த போது நான் , ராஜலெட்சுமி மற்றும் சகோதரிகள் அனைவரும் இருந்தார்கள் என்றால் ஆமாம் . அன்றே இந்த உயில் பற்றி எனக்கு தெரியும் . அது பொய்யான உயில் . இந்த உயில் பொய் என்று சொல்லும் நிலையில் நானோ , என் சகோதரிகளோ இந்த உயில் குறித்து எந்த பரிகாரமும் கோரி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரி . இந்த உயிலில் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்று நான் என்னுடைய பிரமாண வாக்குமூலம் சொல்லியிருக்கிறேன் . அவர்கள் சுவாமிநாதன், கருப்பையன், செல்வம். இந்த மூன்று பேரிடம் உயில் பற்றி பேசினேனா என்றால் பேசினேன் . அந்த உயிலில் சாட்சியாக போட்டிருக்கும் கையெழுத்து அந்த மூன்று பேருடையது தான் என்றால் ஆமாம் . அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் ஒரு செட்டில்மெண்ட் பத்திரம் போடு என்று விஜயராஜ் , மகேந்திரன் என்று கேட்டதால் பெரிய வீட்டு சமாச்சராம் என்று போய் போட்டு கொடுத்தோம். இந்த சாட்சிகளை வழக்கு நடக்கும் போது , 2 வருடங்களுக்கு முன்பு நான் அழைத்து பேச வேண்டிய நிர்பந்தம் என்ன என்றால் கையெழுத்து போட்ட விவரத்தை ஏன் சொல்லவில்லை என்று கேட்டேன் . இந்த 3 சாட்சிகளையும் நான் என் தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன் . என் அப்பா கிரைய செய்த நபர்களில் 10, 11, 12 பிரதிவாதிகள் மட்டும் தான் தரப்பினராகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். மற்றவர்கள் சேர்க்கப்படவில்லை என்றால் ஆமாம் . என் அப்பாவிடம் கிரையம் பெற்ற மற்ற நபர்களையும் தரப்பினராக சேர்க்க வேண்டும்

நான் எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் ஆமாம். என்னுடைய மகளை முதல் வாதியின் மகனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் ஆமாம் . என் அப்பா எனக்கு தனிப்பட்ட முறையில் கொடுத்த சொத்துக்களை நான் விற்றிருக்கிறேன் என்றால் இல்லை . என் சொந்த வருமானத்தில் வாங்கிய சொத்துக்களையும் என் தாய் வழி தாத்தா எழுதி வைத்த சொத்துக்களை தான் விற்றிருக்கிறேன். அந்த சொத்துக்கள் இந்த வழக்கில் சேர்க்கப்படவில்லை . உயிலில் என் அப்பா எழுதி வைத்தப்படி வீடு மற்றும் இதர சொத்துக்களை அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் ஆமாம் . உயிலில் வாதிகளின் மகனுக்கும் என்னுடைய மகனுக்கும் 2, 3 பிரதிவாதிகள் மகனுக்கும் சொத்துக்களை என் அப்பா எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம் . அவ்வாறு உயில் மூலம் சொத்துக்கள் கொடுக்கப்பட்ட பேரன்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக வாதி சேர்க்கவில்லை என்றால் ஆமாம். என்னுடைய பிரமாண பத்திரம் பாரா 4 இல் தாவா 4, 50, 51, 52 சொத்துக்கள் என் பெயரில் தனிப்பட்ட முறையில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் செய்திருக்கிறேன் . என் அப்பா உயில் எழுதுவதற்கு மகேந்திரன் , விஜயராஜ் இருவரும் தூண்டுதலாக இருந்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பா இறக்கும் வரை நல்ல நடைஉடையாக நல்ல மனநிலையில் தான் இருந்தார் என்றால் சரியல்ல . முதல் வாதியின் கணவர் பிரகாசம் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு 109/2015 தாக்கல் செய்து, அதில் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியமளித்தேன் என்றால் ஆமாம். அந்த வழக்கில் பிரகாசம் தாக்கல் செய்த ஆவணம் மோசடியாக தாக்கல் செய்யப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.